ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2163/19 - 2020 පෙබරවාරි මස 19 වැනි බදාදා - 2020.02.19

*2163/19 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: DIK/LND/02/14.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் திக்வெல்ல பிரதேச செயலகப் பிரிவின் வெல்லபட பத்துவ (கிழக்கு) சிறு பிரிவின் வலஸ்கல கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் இதிகஸ்ஆர கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை சிரேஷ்ட நில அளவை அதிபர் அவர்களால் தயாரிக்கப்பட்ட முற் பிரதிப்பட இல. மாற 2821 படத்தில் காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

*1.* **துண்டு இல. 01**

காணியின் பெயர் : திக்ஹேன; விபரம்: தோட்டம், கட்டப்பட்டு வரும் நிரந்தரக் கட்டிடங்கள் இரண்டு மற்றும் கல்லறையொன்றினையும் கொண்டது; ஆரம்ப உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம் : 0.5944 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந்திகதி மு. ப. 10.30 மணிக்கு திக்வெல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுசன்த அத்தநாயக்க,
பிரதேச செயலாளர்,
திக்வெல்லை.

பிரதேச செயலகம்,
திக்வெல்லை,
*2020, பெப்புருவரி 11.*

*3 - 114*